# தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும்

## (தொகுதி - 2)

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் நா. சுலோசனா

முனைவர் மூ. கவிதா

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

சாத்தூர், ஸ்ரீ இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## நூல் விவரக் குறிப்பு


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : தமிழியல் ஆய்வு வரலாறும் வளர்ச்சிப் போக்குகளும் தொகுதி - 2 |
| பதிப்பாசிரியர்கள் | : முனைவர் கோ.விசயராகவன்<br>இயக்குநர் (மு.கூ.பொ)<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை - 600 113.<br><br>முனைவர் நா.சுலோசனா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்மொழி (ம) மொழியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>தரமணி, சென்னை - 113.<br><br>முனைவர் மு.கவிதா<br>உதவிப் பேராசிரியர்<br>தமிழ்த்துறை, ஸ்ரீ இராமசாமி நாயுடு<br>ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர். |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,<br>இரண்டாம் முதன்மைச் சாலை,<br>தரமணி, சென்னை-600 113.<br>தொலைபேசி எண்: 044-22542992 |
| வெளியீட்டு எண் | : |
| ISBN | : 978-93-85165-37-5 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : 2018 |
| பயன்படுத்திய தாள் | : 18.6கி.பி. டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : 11 புள்ளிகள் |
| பக்க எண்ணிக்கை | : xiii+223 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : 1200 |
| விலை | : ரூ.295 /- (ரூபாய் இருநூற்றி தொண்ணூற்றி ஐந்து மட்டும்) |
| அச்சகம் | : நவநீதம் அச்சகம், சென்னை |
| பாடம் | : ஆய்வுக் கட்டுரைகள் |

| | | |
|---|---|---|
| 15. | இரட்டைக் காப்பியங்களில் உரையாடல் உத்தி<br>வ. மணிகண்டன், | 76 |
| 16. | இன்றைய அறிவியல் நோக்கில் சங்க இலக்கியம்<br>வே.மீனா | 81 |
| 17. | பண்பாட்டு உருவாக்கமும் தமிழ்ப் புலனாய்வு இதழ்களும்<br>முனைவர் கோ. முத்துராஜ் | 88 |
| 18. | சேனாவரையர் சான்றும் வாழ்வியல் பதிவும்<br>முனைவர் ஆர். முத்துராஜன் | 92 |
| 19. | வைரமுத்துவின் "தமிழுக்கு நிறமுண்டு" கவிதைத் தொகுப்பில் உத்திகள்<br>ச.மேனகா | 95 |
| 20. | திருக்குறள் ஆய்வு வளர்ச்சி வரலாற்றில் மகளிரின் பங்கு - ஓர் அறிமுகம்<br>அருள்திரு திருக்குறள் தூயர் - மாமுனிவர் - தலைமைத் தூதர்<br>பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு | 99 |
| 21. | வைரமுத்து படைப்புகளில் மனித உரிமைச் சிந்தனைகள்<br>முனைவர் பட்ட ஆய்வேடு - மதிப்பீடு.<br>இ.யோகராஜ். | 104 |
| 22. | நிகண்டுகளும் அகராதிகளும் - ஆய்வு<br>வரலாற்றில் தொன்மைப் புலப்பாடுகள்"<br>முனைவர்ஏ யோகசித்ரா, | 109 |
| 23. | திருக்குறள் கல்விப்புல ஆய்வுகள்<br>த.ரதி **M.A.B.Ed., M.Phil, Ph.D** | 116 |
| 24. | நாட்டுப்புற இயலின் வரலாறு<br>ப.ரதிதேவி | 119 |
| 25. | ஆன்மிக ஹைக்கூக்கள் - ஓர் ஆய்வு<br>முனைவர் ம.ரமேஷ் | 124 |
| 26. | தமிழியல் ஆய்வுலகில் கால ஆராய்ச்சி<br>முனைவர் நா. ரேணுகா | 128 |
| 27. | மலையாள மொழிபெயர்ப்பில் சிலப்பதிகாரம்<br>முனைவர் க. லதா, | 131 |
| 28. | உ.வே.சா.வின் நல்லுரைக் கோவையில் பதிப்பு ஆய்வுகள்<br>அ. லலிதா, | 134 |
| 29. | ஒப்பியல் ஆய்வுகள்<br>சு. விவேக லதா, | 139 |
| 30. | சித்தர் மரபில் "குரு" மகிமை<br>சீ.விஜயலட்சுமி | 143 |
| 31. | திருக்காவலூர் கலம்பகத்தில் அன்னையின் சிறப்பு<br>முனைவர் திருமதிநா.விஜயலட்சுமி எம்.ஏ.எம்.பில் | 145 |
| 32. | வேளாண்மை மரபுகளும் மாற்றங்களும்<br>முனைவர்து.வெள்ளைச்சாமி, | 148 |
| 33. | நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும்<br>முனைவர்.த.வேல்மயில் | 152 |
| 34. | **சொல்லதிகாரத்தில் காப்பிய இலக்கியப் புலமை**<br>**கி.வைரலிங்கம்** | 154 |

# தமிழியல் ஆய்வுலகில் கால ஆராய்ச்சி

முனைவர் நா. ரேணுகா
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி
மதுரை

தமிழ்மொழியைப் போன்றே நீண்ட வரலாற்றைக் கொண்டது தமிழியல் ஆய்வு வரலாறு. தமிழியல் ஆய்வை உரையாசிரியர் காலந்தொட்டு காணுவதே மரபாக இருப்பினும் அறிவியல் முறையில் அமைந்த ஆய்வுகள் பிற்காலத்தில் தான் தோற்றம் பெற்றன.

> "தமிழ்மொழி, அதிலுள்ள இலக்கியம், இலக்கணம் பற்றிய கொள்கைகள், தமிழ்ப்புலவரின் காலம், வாழ்க்கை, நூல்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவருக்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல்கள் முதலியோருக்கும் இடையே நிகழ்ந்த உறவு ஆகியவைகளைப் பொருளாகக் கொண்டு, விருப்பும் வெறுப்பும் இன்றி, நம்பத் தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரிசீலனை முறைகளைக் கையாண்டு, தற்காலப் பண்புடன் ஆராய்ந்து, உண்மையை நாடும் முயற்சியே தமிழ் ஆராய்ச்சி ஆகும்." (தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், முன்னுரை)

என்ற கூற்று தமிழாய்வின் வரையறையைச் சுட்டுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழியல் ஆய்வு எல்லைகள் பலவாகக் கிளைத்தன. ஆய்வின் போக்குகளும் விரிவடைந்தன. இதற்கு அடித்தளமிட்டது பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ்ச்சூழலே எனில் மிகையன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய காலச்சூழலை,

- பழந்தமிழ் நூல்களின் அச்சுருவாக்கம்
- தமிழ் இதழ்களின் வளர்ச்சிப்போக்கு
- புதிய கல்வி முறை

முதலிய கூறுகளைக் கொண்டே அணுக வேண்டும். இக்கால கட்டத்தில் தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டு, பரவலாகப் பரவின. தமிழ் நூல்களை ஆராய்ந்து உலகறிய செய்ததுடன், தமிழின் தொன்மையைத் திராவிட – ஆரிய ஒப்பீடுகளுடன் எடுத்துக்காட்டப்பட்டது. இதனால் இலக்கியங்களை நுண்ணிய அறிவுடன் ஆராயும் போக்கு வளர்ந்தது.

இன்றைய காலச் சூழலில் தமிழியல் ஆய்வு மொழியியல், சமூகவியல், தொல்லியல், வரலாற்றியல் எனத் தனித்தனியாய் இயங்குவனவாய் இல்லை. இத்துறைகள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஆய்வுக் களமாக உருக்கொள்வன என்ற சிந்தனை உதித்தது. புதிய கோணத்தில் ஆய்வு அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழியல் ஆய்வுலகில் மேற்கொள்ளக்கூடிய முறைகள் பலவுள்ளன. அவற்றில் ஒன்று கால ஆராய்ச்சி ஆகும். தமிழ்ச்சூழலில் இவ்வாய்வு அவ்வளவாக முன்னெடுக்கப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வேகமாக வளர்ந்து வந்த இவ்வாய்வுப் போக்கு விரைவிலே அருகியும் போனது.

- தமிழின் தொன்மையை மாற்றும் தன்மையுடைய முடிவுகளை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தமிழ் ஆராய்ச்சியாளரின் மனப்போக்கும்
- முரண்பட்ட கருத்துக்கள் குழப்பங்களை விளைவித்ததும்

இவ்வாய்வு அருகிப் போகக் காரணமாயின. இச்சூழலில் கால ஆராய்ச்சி தேவையற்ற வீண் முயற்சி என்ற கருத்தாக்கமும் உருவானது. ஆயினும் கால ஆராய்ச்சியின் தேவை குறித்த விளக்கங்கள் ஆய்வுலகில் முன் வைக்கப்பட்டன. இருப்பினும் கால ஆராய்ச்சியின் தேவையைப் பலரும் வலியுறுத்தி வந்தனர்.